RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சங்க இலக்கிய அக மாந்தர்களும் அவர்தம் பண்புநலன்களும்

**தி. தருண்சர்மா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை - 600 005, இந்தியா

# Virtues and Moral Qualities of Akam Characters in Sangam Literature

**T. Tharunsharma** [a, *]

[a] Department of Tamil, Presidency College, Chennai - 600 005 Tamilnadu, India

* Corresponding Author:
ttsart99@gmail.com

**ABSTRACT**

Society is an organized system formed by a group of people who live together over a long period within a particular geographical region. Human beings are inherently social in nature and cannot live in isolation. To fulfill both their personal and collective needs, they establish relationships with others and develop customs, norms, and rules that govern social interactions. These social conventions ensure harmony and facilitate the orderly functioning of society. Sangam literature provides valuable insights into the lives, relationships, and moral values of the people of ancient Tamil society. In particular, the Akam tradition portrays the emotional and personal dimensions of human life through well-defined literary characters. These Akam personae embody virtues such as love, loyalty, patience, integrity, compassion, and social responsibility, reflecting the ethical ideals of the Sangam age. This article examines the character, conduct, and moral qualities of the Akam characters in Sangam literature, highlighting how they integrated individual values with the social and cultural norms of their time.

**Keywords:** Sangam literature, Akam Characters, Sangam people, Social conventions.

## முன்னுரை

தமிழிலக்கியங்களுள் மிகவும் தொன்மையானது சங்க இலக்கியங்கள் ஆகும். தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு அடிப்படைத் தரவுகளாக இருப்பவை சங்க இலக்கியங்கள். தொடர்ந்து நிகழ்ந்துவரும் சங்க இலக்கியம் குறித்த ஆய்வுகளிலிருந்து பழந்தமிழரின் வாழ்க்கை முறைகள் மிக நுட்பமாக அலசப்படுகின்றன. பண்டைத் தமிழர்தம் சமூகத்தைப் பற்றியும், அவர்களின் பண்பாட்டைப் பற்றியும் சிந்திக்க வேண்டியிருக்கின்றன. அனைத்திலும் தனித்தன்மை பெற்று விளங்கும் இச்சமூகம், ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு நிலையிலும் தம் தனி முத்திரையைப் பதித்து வந்துள்ளது. அவை பண்பாட்டில் சிறந்து விளங்கியது என்பதும் தெளிவாகக் காணமுடிகின்றன.

அக ஒழுக்கமாகிய அகத்திணையைக் கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என ஏழு திணைகளாக வகுத்துக் கூறுவார் தொல்காப்பியர். கைக்கிளையாவது ஒருதலைக்காமம்; பெருந்திணை என்பது பொருந்தாக்காமம். இவ்விரு திணைக்குரிய பாடல்கள் மிகக்குறைவு. ஏனைய ஐந்தும் அகமாந்தர்களின் தூய அன்பை வெளிப்படுத்துகின்றன. எனவே, இவ்வைந்திணையும் ‘அன்பின் ஐந்திணை’ என்று குறிப்பர். நீண்ட வரலாற்றுப் பின்புலம் கொண்ட ஒரு சமூகம் தோன்றிய காலம் முதல், பல்துறைச் சார்ந்த வாழ்வியல் கூறுகளில் குறை நிறைகளைச் செம்மைப்படுத்திக் கொண்டே வருவது இயல்பு. கால வளர்ச்சிக்கேற்பவும், சமூகத் தேவைக்கேற்பவும் கருத்துகள் புத்தாக்கம் பெறுவதும் புதுப்பொலிவு பெறுவதும் இயற்கை.

## அகம் சார்ந்த பண்பாடு

அகம் என்பது தனியே இருந்து வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும் ஒருங்குபெற்ற தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் கண்டு அன்புக் கொண்டு உள்ளத்தால் ஒன்றுபட்டு மணம்புரிந்து வாழ்தலாகும். ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் கலந்து வாழ்ந்த வாழ்வு அகவாழ்வென்றும், இல்வாழ்வென்றும் கூறுவர். அகத்தை அன்பின் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என ஏழுவகையாக பண்டையத் தமிழர் வகுத்தனர்.

இதனைத் தொல்காப்பியர், "கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப"[1] எனக் குறிப்பிடுகின்றார். இவற்றில் இடையில் அமைந்துள்ள குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்தும் திணைகள் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. இவை அன்பின் ஐந்திணை எனப் போற்றப்படுகின்றது. "பிறப்பு, குடிமை முதலானவற்றால் ஒத்தத் தன்மையுடைய காதலர்பால் நிகழும் காதல் மட்டுமே அகனைந்திணை எனப்பட்டது."[2] கைக்கிளையும், பெருந்திணையும் ஒத்த அன்பில்லாதார் இருவரிடையே நிகழும் ஒழுக்கங்கள் என்பதால் இவை பொருந்தா ஒழுக்கங்கள் என்று கூறப்படுகின்றன. இவ்வொழுக்கங்கள் பற்றியப் பாடல்கள் சங்க இலக்கியத்தில் சில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன. அன்பின் ஐந்திணைகள் உலகில் நிலைக்க வேண்டும் என்பதால் சங்ககாலப் புலவர்கள் அவற்றைப் பாடுவதையே கருதுகோளாக வைத்துப் பாடினார்கள் எனலாம்.

"ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்பட்டதாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயராம்"[3] என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

## அகம் சார்ந்த மாந்தர்கள்

அகத்திணை மரபில் மாந்தர்களின் பெயர்கள் சுட்டப்படுவதில்லை. மாறாகத் தலைவன், தலைவி, தோழி எனப் பொதுப்பெயர்களால் சுட்டும் மரபு காணப்படுகின்றது. "மக்கள் நுதலிய அகனைந் திணையும் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்"[4] மேற்குறிக்கப்பட்டவர்கள், சங்க இலக்கியத்தில் அகத்திணை சார்ந்த மாந்தர்களாகக் கூறப்படுகின்றனர்.

## தலைவனின் பண்பு நலன்கள்

அகத்திணையில் தலைவன் என்னும் சொல் தனிப்பட்ட ஒருவனை உணர்த்தாது. காதல் வாழ்க்கையில் காதலனாகவும், இல்லற வாழ்க்கையில் கணவனாகவும் வாழும் ஆடவரைக் குறிக்கும். தமிழ் இலக்கண இலக்கியங்கள் ஆடவரைப் பற்றிக்கூறும் செய்திகள் தமிழரின் வாழ்க்கையைப் புலப்படுத்துகின்றன. அகத்திணை வழக்கில் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் ஆடவரைத் தலைவன், தலைமகன், கிழவன், கிழவோன் என்று குறிக்கப்படுவதைக் காணமுடிகின்றது. தலைவியோடு தன் வீரத்தை வெளிப்படுத்திக் களவு கொள்வான். சில நேரம் திருமணம் செய்து வையுங்கள் என வெளிப்படையாகப் பேசுவது 'கற்பொடு புணர்ந்த கௌவை' எனக் கூறப்படுகின்றது.

தன் பெற்றோர் ஒப்புக்கொள்ளவில்லை எனின் வற்புறுத்துவான். பருவ காலத்தில் திருமணத்தை வலியுறுத்துவான். தலைவியை உடன்கொண்டு செல்லும்போதும் இடைவழியில் தலைவியின் பெற்றோர் தடுக்கும்போதும் திருமணத்தை வலியுறுத்துவான். தலைவியை அவளது சுற்றம் மீட்டுக்கொண்டு செல்லும்போது கலங்கிக் கதறுவான் என்பதைச் சங்க இலக்கியத்தின் ஊடாக அறியமுடிகின்றது. பொருள் இல்லாத வாழ்வு சமூகத்தால் புறந்தள்ளக் கூடும் என்பதால் இளமைக் காலத்தே பொருளீட்டவேண்டும். ஆதலால் பொருளீட்டத் துணிவது தலைவன் கடமை. எனவே பொருளீட்டும் பொருட்டுத் தலைவியைத் தலைவன் பிரிய நேர்கிறது. கற்பு காலத்தில் தலைவன் தலைவியை மணந்த பின்பு காமக்கிழத்தியை மணந்து கொள்வான். தலைவன் பரத்தையோடும் தொடர்புக்கொள்வான்.

## தலைவியின் பண்பு நலன்கள்

பெண்மகளைத் தலைவி, தலைமகள், கிழவோள், கிழத்தி என்பர். காதல் வாழ்க்கையில் தலைவியின் பங்கும், உரையாடல்களும் நிகழும் சூழல்கள் இப்பகுதியில் தொகுத்துக் காட்டப்படுகின்றன. தலைவன் வருகையில் பகற்குறியிடத்தும், இரவுக்குறியிடத்தும் தவறுகள் செய்யும்போதும் அவன் கூறியக் காலத்தில் வாராமல் இருக்கும்போதும், அவன் கூடிய பின்னர் நாணத்தோடு அவனை அனுப்பும்போதும், திருமணத்துக்குப் பின் உறவு என்று தோழி தடுக்கும் போதும்,

பெற்றோர் திருமணத்துக்கு உடன்பட்டபோதும், மறுத்தபோதும் எனப் பல இடங்களில் தலைவியின் கூற்று நிகழும் என்பதனை அறியமுடிகின்றது.

தலைவனின் அன்பைப் பாராட்டுதல், தலைவன் பிரிந்த காலத்தில் நோதல், தடாகத்தில் பிற மகளிருடன் நீராடியவனிடம் ஊடல், ஈன்றணிமைக் காலத்தில் தலைவன் வேறு மகளிரை நாடித் திரும்பியபோது ஊடல், கெஞ்சும் தலைவனை அவளிடம் செல் எனக்கடிதல், காமக்கிழத்தி தன் மகனைத் தழுவி விளையாடும்போது மகனைக்கடிதல், இந்த விளையாட்டைக் கண்டுகொள்ளாமல் செல்லல், தந்தையை ஒப்பர் மகன் என்று குழந்தையைப் பழித்தல், அவன் விலகியிருந்த கொடுமையை எண்ணித் தானும் தற்காலிகமாக விலகி நிற்றல், அணி செய்வித்த தன் மகனைத் தலைவனது பரத்தை தூக்கும்போது நோதல், பரத்தை சூள் உரைத்ததைப் பற்றிக் கடிதல், தோழி தலைவன் பக்கம் பேசும்போது எதிர்த்துப் பேசுதல், இப்படித் தலைவி சினந்தும், மகிழ்ந்தும், பிரிந்தும், விரும்பியும் பேசுவாள் என்பதனைச் சங்க இலக்கியம் வாயிலாக அறியமுடிகின்றது.

## தோழியின் பண்புகள்

தலைவன் தலைவியின் அன்பு வாழ்க்கை அல்லது காதல் வாழ்க்கைக்குத் துணையாவதும், தேவையான போது இடித்துரைக்கின்ற தன்மையும் தோழிக்கு உண்டு. "தலைவி கூற்றாக வரும் 559 பாடல்களில் ஏறத்தாழ 380 பாடல்கள் தலைவி தோழியிடம் தன் ஆற்றாமையைக் கூறும் பாடல்களாகவே அமைகின்றன. இதனால் தோழிக்கும் தலைவிக்கும் உள்ள உறவு நெருக்கம் புலப்படும்"[5]

"தாங்கருஞ் சிறப்பின் தோழி மேன"[6] - தோழி அகத்தில் தனிச்சிறப்புடையவள் என்று தொல்காப்பியர் கூறுகிறார். மேலும் தோழி செவிலியின் மகள் என்பதும் (தொல். பொருள். களவு. நூ.123) புலப்படுகிறது. தலைவன், தலைவியின் வாழ்வு செந்நெறியில் செல்வதற்கு அன்பு, அறிவு, அறன் என்ற மூன்றையும் சொல்லும் மனமும் செயலும் கொண்ட நட்பின் வடிவே தோழி எனலாம். பலநாள் பரத்தையர்பாற் சென்று மீண்டு வாயில் வேண்டிவந்த தலைவனைத் தோழி இடித்துரைத்துப் பேசுவதைச் சங்க இலக்கியத்தின் அகப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. 'பகற்குறி இடையீடு' அதாவது பகலில் தலைவனும் தலைவியும் பழக நேரிடும் வாய்ப்பைத் தடுத்து நிறுத்துபவளாகவும் தோழி காணப்படுகிறாள்.

பொருளீட்டி வந்தத் தலைவனைச் சிறப்பித்தல், முன்பு தலைவியைப் பிரிந்தபோது அவனைக் குறை கூறியதைச் சொல்லி வருந்துதல், தலைவனை மீட்டுக் கொடுத்த தெய்வத்துக்குக் கடன் செலுத்துதல், பொருளுடன் மீண்டதால் அவன் குற்றங்களை மறத்தல், அகத்துக்குள் அடங்காத அவன் ஒழுக்கத்தைப் பாராட்டல், தலைவியை அவனிடம் ஒப்படைத்தல், தலைவனிடம் வணக்கமாகப் பேசுதல், தலைவியை அழைத்துக்கொண்டு வெளியிடம் சென்று விளையாடுமாறு கூறுதல், தலைவனைப் பிரிந்த தலைவியை நல்வழிப்படுத்தல் ஆகியனவும்

அவன் பிரிவால் இழந்த தலைவியின் அழகினை மீட்டுத் தா எனல், தலைவியைப் பிரிந்ததற்குத் தலைவன் நாணும்போது பக்குவமாகப் பேசுதல், தலைவன், தலைவியைக் கைவிடேன் எனச் சூளுரைத்ததை நினைவூட்டல், பெரியோர் (தலைவன்) ஒழுக்கம் பெரிது எனத் தலைவியைத் தேற்றல், தலைவியின் புலவியைத் தணித்தல், புலவி பெரிதாகி ஊடலாக மாறியபோது தலைவன் பக்கமாகப் பேசுதல், களவு ஒழுக்கத்தின்போது தலைவி நடந்துகொண்டதை அவளுக்கு நினைவூட்டல், பாணர், கூத்தர், விறலியர் முதலான வாயில்கள் தலைவன் பக்கம் பேசும்போது தோழி தலைவி பக்கமாகப் பேசுதல், தலைவியை விட்டு விலகிச் சென்ற தலைவனைக் கண்ணோட்டமின்றித் திட்டுதல், தலைவன் நெடுந்தொலைவு பிரியும் காலத்து மரபு என விளக்குதல் முதலானவை தோழியின் பங்கு எனத் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

## பாங்கனின் பண்புகள்

பாங்கன் என்பவன் தலைவனின் பாங்கறிந்து ஒழுகுபவன். எப்போதும் தலைவனுடன் இருப்பவன். பாங்கர் நிமித்தம் பன்னிரெண்டு ஆகும். பாங்கன் தலைவனுக்கு உறுதுணையாக இருத்தல் மட்டுமல்லாது தலைவனோடு மாறுபட்டு இடித்துரைக்கும் உரிமை உள்ளவனாகவும் களவொழுக்கக் காலத்தில் தலைவன் தலைவியின் நினைவாகவே இருக்கும்போதும், கற்பொழுக்கக் காலத்தில் தலைவன் பரத்தையை நாடும்போதும் பாங்கன் இடித்துரைப்பான். மேலும் அகத்திணை மாந்தர்களில் வாயில்களில் ஒருவராக இருந்து செயலாற்றுபவன் பாங்கன் என்பதும் சிறப்பு வகையால் பாங்கன் கூற்று களவு வாழ்க்கையிலையே நிகழும் என்பதையும் தொல்காப்பியம் வழி அறிய இயலுகிறது.

## நற்றாய்

அக இலக்கியங்கள் நற்றாய் செவிலித்தாய் என இருவரைக் குறிப்பிடுகின்றன. பொதுவாகத் தாய் எனக் குறிப்பிட்டால் அது பெற்ற தாயையும், சிறப்பு வகையால் தலைவியை வளர்த்த செவிலியையும் குறிக்கும் (தொல். பொருள். களவு. நூ.34). இவரை யாய் (என் தாய்), ஞாய் (உன் தாய்) என்று பாகுபடுத்தி அழைப்பது வழக்கம் என்று குறுந்தொகை (40) கூறுகிறது. அக வாழ்க்கையில் பெற்ற தாயின் பங்கு பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தாய், செவிலி செயலைத் தடுத்தல் தலைவன் தலைவியைக் கொண்டு தலைக்கழிந்தபோது நற்றாய் புலம்புவாள். களவு வாழ்க்கை பற்றி நற்றாய் தன் மகளோடும், மகளின் கிழவனோடும் நேருக்கு நேர் பேசும் வழக்கம் இல்லை.

“எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப் பெருங்குளம் காவலன் போல”[7] பெருமழை பொழிந்த பாதி இரவில் வீசும் அலைகளின் துளிகள் பறக்கும் சிறு கரையினையுடைய பெருங்குளத்தைக் காவல் செய்திருப்பவன் போல அன்னை நம்மைக் காவல் செய்து இவ்விரவுப் பொழுதிலும் துயில் மறந்து விழித்திருக்கின்றாளே என்று தலைவி, தலைவன் கேட்குமாறு தோழிக்குச் சொல்லுவாள். இவற்றால் நற்றாயின் கடமை உணர்வை அறியமுடிகின்றது.

## செவிலித் தாயின் பண்புகள்

தோழியின் தாய், நற்றாயின் தோழி. இவளே செவிலித்தாய். செவிலியின் சிறப்பைப் போற்றும் முறையில் தொல்காப்பியர் ‘தாய்’ என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவள் செவிலியே எனக்கூறி அதற்குரியக் காரணத்தையும் குறிப்பிடுவார். செவிலி தலைவியிடம் உரையாடும் இடங்கள் 13 எனச் சுட்டிக்காட்டி பிறவும் உண்டு எனத் தொல்காப்பியம் கூறுகிறது. தலைவியின் களவு ஒழுக்கத்தை ஊர் தூற்றும்போது, தலைவனுடன் காணும்போது, ஊர் களவு ஒழுக்கத்தைத் தூற்றும் போது, வேலன் கழங்கை உருட்டிக் குறிசொல்லும் போது, வெறியாட முடிவெடுக்கும்போது, வெறியாட்டு மடத்தனம் என எண்ணும்போது, தலைவி தலைவனை எண்ணிக் கனவில் அரற்றும்போது முதலில் தோழியை வினவுவாள்.

மகளின் காதலைக் கூறி நற்றாய் தெய்வங்களை வாழ்த்தும்போது, தலைவி தலைவனுடன் சென்றதை அறியும்போது, உடன்போக்கு நிகழ்த்தியத் தலைவனும் தலைவியும் திருமணம் செய்துகொள்ளாமல் வாழும்போது, தலைவன் குடிக்கும், தலைவி குடிக்கும் ஒப்புமை காணும்போது, தலைவன் தலைவியரின் குண ஒற்றுமையை ஆராயும்போது, செவிலி தலைவியிடமும், அவளது தோழியிடமும் உரையாடுவாள்.

தலைவன் தலைவியைக் கொண்டு சென்றபோது தேடிசென்று வினாவுவாள். நிகழ்ந்ததையும், நிகழ்வதையும், நிகழப்போவதையும் சொல்லி இனிச் செய்யவேண்டிய நல்லன இவை, செய்யாதிருக்க வேண்டிய நல்லவை அல்லாதன இவை எனத் தன் வளர்ப்பு மகளுக்கு எடுத்துக்காட்டி நல்வழிப் படுத்துபவளாக செவிலி திகழ்வதையும் அறியமுடிகின்றது.

## காமக்கிழத்தியர் - கூற்று நிகழுமிடம்

காமக்கிழத்தியர் தலைவனைத் தழுவலாமா வேண்டாமா என்று புலவி கொள்ளும்போதும், தலைவன் தன் வீட்டில் தன் மனைவியிடம் நடந்துகொள்ளும் பணிவை இகழும் போதும் தலைவனின் மகனைக் கண்டு மகிழும்போதும் களவு, கற்பு நெறியில் வந்த மனையோள் செயல்களைப் பொறுக்க முடியாதபோதும் தலைவனுக்குத் தன் இன்பத்தில் சலிப்புத் தட்டியபோதும், அவனை மனைவியிடம் அனுப்பும்போதும் அணிகலன்களுடன் வரும் தலைவனின் மகனைத் தழுவிக் கொள்ளும்போதும் மனைவி இருக்கும்போதும் தான் மிகை என்றுக் கூறும்போதும் தலைவனுடன் ஆறு, குளம் போன்ற இடங்களில் பண்ணை விளையாடும்போது எனப் பல்வேறு சூழல்களில் காமக்கிழத்தியின் கூற்று நிகழும் இடங்களாகச் சங்க இலக்கியம் கூறுகிறது.

## பரத்தை பண்புநலன்

நேர் ஒழுக்கம் அல்லாது பரந்துபட்ட ஒழுக்கம் உடையவள். பரத்தையிடம் சென்று திரும்பிய தலைவன், தலைவியின் ஊடலைத் தணிக்கக் கெஞ்சுவான். வேட்கை, காதலியிடம் பேச்சுக்கொடுத்தல், அவளைத் தொட்டுப் பயிற்றுவித்தல், இடம் பெற்றுத் தழுவுதல், தோழியின் துணையைப் பெற்றுக் கூடுதல், மடலேறுதல் பற்றிக் கூறுதல் முதலானவை களவு வாழ்க்கையில் நிகழும்.

“தண் துறை ஊரன் தண்டாப் பரத்தமை புலவாய் என்றி - தோழி! புலவேன்”[8] பரத்தை என்பவள் ஆடலிலும் பாடலிலும் வல்லவராகி அழகும் இளமையும் காட்டி இன்பத்தையும் பொருளையும் விரும்பி ஆடவரிடம் செல்லும் பெண்கள் ஆவர். இவர்கள் ஒருவரிடத்தும் தங்காத் தன்மை உடையவர்கள். கணிகையர் என்பதும் இவர் பெயர் ஆகும். இவர்களிடம் செல்லும் ஆடவர்களைப்

‘பரத்தமை ஒழுக்கம்’ மேற்கொண்டவர்கள் எனத் தொல்காப்பியம், அகப்பொருள் விளக்கம் முதலிய இலக்கண நூல்கள் புலப்படுத்துகின்றன.

பரத்தையர்கள் சேரிப்பரத்தையர், காதல் பரத்தையர் எனப்படுவர். சேரிப்பரத்தையர் தனிப்பட்ட யாரையும் விரும்பாமல் இயல்பினராய் பலருக்கும் உரியவர்கள் ஆவர். காதல் பரத்தையர் என்பவர் சேரிப்பரத்தையின் மகளாய்த் தலைவன் ஒருவனுக்கே உரிமை பூண்டு காதல் காரணமாகப் புணர்வோர் ஆவர். இவளே குலப்பரத்தை எனவும் காமக்கிழத்தியின் தாய் எனவும் கூறப்படுகிறாள். தலைவன், தலைவியை இகழ்ந்து, தம்மைப் புகழ்தலும், நிகழ்பொருள் காத்தலும் இவர்களது இயல்புகளாகக் கூறப்படுகிறது.

## முடிவுரை

ஒரு நாட்டின் பண்பாட்டைத் தெரிந்துகொள்ள முதலில் அந்நிலத்தில் வாழும் மக்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். சங்க இலக்கியத்தில் அகம் சார்ந்த மாந்தர்களாகத் தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி, பரத்தையர், காமக்கிழத்தியர் முதலானோர் உள்ளனர். அவர்கள் மூலமாக ஒரு கூட்டு வாழ்க்கை நெறி, மக்களின் இல்லறப் பண்பாடு குறித்தும், அவர்கள்தம் பண்புநலன்கள் குறித்தும் தெரிந்து கொள்ள பண்டைத் தமிழிலக்கிய இலக்கணங்கள் துணைசெய்கின்றன. எனவே தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் போன்றன தமிழர் வாழ்வியலைப் படம்பிடித்துக் கட்டும் காலக்கண்ணாடி என்று கூறின் அது மிகையாகாது.

## References


தொல்காப்பியர், தொல்காப்பியம் (பொருளதிகாரம்-அகத்திணையியல்), நூற்பா எண்-947.

தட்சிணாமூர்த்தி அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்கம்-65.

தொல்காப்பியம், நச்சினார்க்கினியர் உரை, பக்கம்-260.

தொல்காப்பியர், தொல்காப்பியம் (பொருளதிகாரம்-அகத்திணையியல்), நூற்பா எண்-1000

சரளா ராசகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, பக்கம்-61.

தொல்காப்பியர், தொல்காப்பியம் (பொருளதிகாரம்-களவியல்), நூற்பா எண்-112.

அகநானூறு, பாடல் எண்-252, வரி 12-13.

நற்றிணை, பாடல் எண்-280, வரி 4-5.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License